In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi
S.C.No.292/2022
Deposition of P.W.5

| | |
|---|---|
| Name | திருமதி.அன்னமுத்து |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 10th day of March 2026.

(எதிரிகள் ஆஜர் .)

**முதல் விசாரணை :**

நான் வீரப்பட்டியில் வசித்து வருகிறேன். சாட்சி பேச்சியம்மாள் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மாணிக்கராஜ், ரேஷ்மாவும் திருமணத்திற்கு பின்னர் ஊருக்கு வந்தார்கள். மாணிக்கராஜ், ரேஷ்மாவும் கொலை செய்யப்பட்டு இறந்து விட்டார்கள். யார் கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்கும் விதமாக சாட்சியம் அளிக்க முன் வராத காரணத்தால் அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞரால் பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அதன் பேரில் சாட்சி அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மாணிக்கராஜ், ரேஷ்மாவும் ஒருவரையொருவர் காதலித்து வந்தனர் என்றால் அதுபற்றி

எனக்கு தெரியாது. மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும் அவர்களது வீட்டிற்கு தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டனர் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் சிறிது நாட்கள் கழித்து மாணிக்கராஜ்ம், ரேஷ்மாவும் வீரப்பட்டிக்கு வந்தனர் என்றால் சரிதான். இந்நிலையில் கடந்த 24.07.2022 ம்தேதி மாலை சுமார் 4 மணியளவல் பேச்சியம்மாள் வீட்டின் முன்பு நானும், எனது மருமகள் தமிழ்செல்வி, பேச்சியம்மாள் மற்றும் மாணிக்கராஜ், ரேஷ்மா ஆகியோர் பேசி கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரிகள் மாணிக்கராஜையும், ரேஷ்மாவையும் பார்த்து ஊருக்குள் வந்து எங்களை கேவலப்படுத்துகிறீர்கள், ஊரைவிட்டு ஓடுங்க, இல்லையென்றால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டிவிட்டுபோனார்கள் என்றால் சரியல்ல. பின்னர் 25.07.2022 ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் நானும், பேச்சியம்மாளும் எனது மருமகள் தமிழ்செல்வியும் தண்ணீர் குடிப்பதற்காக வந்து கொண்டிருந்தபோது சாட்சி பாண்டியராணியும் எங்களுடன் வந்தார் என்றால் சரியல்ல. அப்போது பேச்சியம்மாளின் வீட்டில் ஒரே அலறல் சத்தம்கேட்டது என்றால் சரியல்ல. நாங்கள் போய் பார்த்தபோது 1 வது எதிரி ரத்தம் வடிந்த அருவாளுடன் பேச்சியம்மாள் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தார் என்றால் சரியல்ல. பின்னர் 1 வது எதிரி பேச்சியம்மாளை பார்த்து என் மகளை உன் மகனுக்கு கட்டி வச்சு என் சொத்தை அனுபவிக்கலாம்னு பார்க்கிறீயா இரண்டுபேரையும் வெட்டிவிட்டேன், சத்தம்போட்டால் உங்களையும் வெட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்றால் சரியல்ல. பின்னர் நாங்கள் பேச்சியம்மாளின் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது மாணிக்கராஜ், ரேஷ்மா இருவரும் வெட்டுகாயங்களுடன் ரத்தவெள்ளத்தில் கிடந்தார்கள் என்றால் சரியல்ல. கீழே கிடந்த ரேஷ்மாவை பேச்சியம்மாள் தூக்கியபோது எங்க அப்பா

இரண்டுபேரையும் வெட்டிவிட்டார் என்று சொல்லி கொண்டே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. ரேஷ்மாவிற்கு கழுத்தில் வலதுபுறம் வெட்டுக்காயங்களும் மாணிக்கராஜ்ற்கு கழுத்தில் இடதுபுறமும் இடதுகாதிற்கு மேலும், இடதுகையிலும் பலத்த வெட்டுக்காயங்கள் காணப்பட்டன என்றால் சரியல்ல. ரேஷ்மாவும், மாணிக்கராஜ்ம் காதலித்து திருமணம் செய்து கொண்டது எதிரிகளுக்கு பிடிக்காததால் மாணிக்கராஜையும், ரேஷ்மாவையும் வெட்டி கொலை செய்து விட்டனர் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மேற்படி விவரங்களை வாக்குமூலமாக அளித்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றவேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

போலீசார் விசாரித்தபோது அன்றைய தினம் வேலைக்கு போய்விட்டதாகவும் எதுவும் தெரியாது என்று சொன்னேன். நான் 100 நாள் வேலை திட்டத்தில் அன்றைய தினம் வேலைகது போயிருந்தேன். அன்றைய தினம் பேச்சியம்மாள் எங்களுடன் வேலைக்கு வந்திருந்தாரா என்றால் வந்திருந்தார். வேலைக்கு எல்லோரும் ஒன்றாக தான்போனோம் என்றால் சரிதான். வேலை முடித்து ஒன்றாக தான் வந்தோமா என்றால் அரை மணிநேர வித்தியாசத்தில் முன்னே பின்னே வந்திருப்போம். அன்றையதினம் வேலை 3 மணிக்கு முடிந்தது. காலையில் 8 மணிக்கு வேலை தொடங்கியது. மதியம் 1 மணிக்கு சாப்பாடு நேரம். மதியம் வேலை செய்யமாட்டோம். 3 மணிவரை இருப்போம். அன்றையதினம் பேச்சியம்மாள் 3 மணிவரை இருந்தாரா என்றால் சரிதான்,இருந்தார்.

**<u>மறுவிசாரணை :</u>**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/–எம்.பி.முருகன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.